அந்தரங்கமானது

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

NEW

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2017
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2017

විෂයය අංකය / பாட இலக்கம்: **12**  විෂයය / பாடம்: **சைவநெறி**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 1 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 1 எல்லாம் | 22. | 4 | 32. | 3 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 4 | 24. | 4 | 34. | 4 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 4 | 40. | 3 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல்: එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

*From Siyamaladevi*

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**

# சைவநெறி – II

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i. **இசைப்பாடல்களால் அமைந்துள்ள வேதம் எது?**
சாமவேதம்

ii. **ஆகமங்களின் குறிக்கோள் யாது?**
ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேறு. , மோட்சம், வீடுபேறு, முத்தி

iii. **திருநாவுக்கரசர் கைலாயத் திருக்கோலத்தைத் தரிசித்த இடம் யாது?**
திருவையாறு.

iv. **தியாகராசன் என்னும் பெயர் சுட்டி நிற்கும் கடவுளின் பெயர் யாது?**
சிவபெருமான். திருநீலகண்டர், சிவன்

v. **அரிமர்த்தன பாண்டியனது பொற்காசுகளைச் சமூக நன்நோக்கில் நின்று செலவிட்ட நாயனார் யார்?**
மணிவாசகர் / மாணிக்கவாசகர் / திருவாதவூரடிகள்.

vi. **"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங்கரன்"**
**என்பதில் வரும் 'சங்கரன்' என்ற சொல்லின் பொருள் யாது?**
ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவர்.

vii. **பாடசாலைகளில் நடத்தப்படும் சமய விழாக்கள் இரண்டினை எழுதுக.**
சிவராத்திரி, நவராத்திரி, நாயன்மார் குருபூசை. மெய்பெரியார் திருபூசைத்தினம், தைப்பொங்கல் திருநிறைப்புத்தாண்டு அடிப்பற்பு.
**( ஏதாவது இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக )**

viii. **பஞ்சாங்கத்தில் இடம்பெறும் திதிகளின் பெயர்கள் இரண்டினைத் தருக.**
பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரையோதசி, சதுர்த்தசி, பூரணை அமாவாசை.
**(ஏதாவது இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

ix. **உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சித்தாந்த சாத்திர நூல்கள் இரண்டினைப் பெயரிடுக.**
சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.
**(ஏதாவது இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

x. **சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் மூன்று தருக.**
கடமை, வாய்மை, அன்புடைமை, பிறரை மதித்தல், ஒழுக்கமுடைமை, செய்ந்நன்றி மறவாமை. 3-2 2-1
**(ஏதாவது மூன்று எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

*By Thuvarakan H+*

(10 X 2 = 20 புள்ளிகள்)

2. i. மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

ii. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

திருச்சிற்றம்பலம்

அ. உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**
இறைவரே! உமாதேவியார் பிரியாது பொருந்தியிருப்பது உம் திருமேனியையே. சிவஞானிகள் உணர்ந்து போற்றுவது உமது பேரருளையே. கற்றுணர்ந்த துறவிகள் வெறுப்பது மனைவி முதலிய குடும்பத்தையே. நெற்றிக்கண் எரித்தது மன்மதனையே. உமது திருமேனியை மறைப்பது பாம்பே. தேவர்கள் செய்வது உமது பணிவிடையே. நீர் பெற்றெடுத்து விரும்பி அணைத்தது முருகப் பெருமானையே. நீர் திருப்பிரமபுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றீர்.

திருச்சிற்றம்பலம்

(ஆ)
பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**
தன் குழந்தையின் பசி வேளையினை அறிந்து பால் ஊட்டுகின்ற தாயினைப் பார்க்கினும் மிகவும் என்மீது இரங்கி, தீவினையேனுடைய உடல் நீங்குமாறு அதனை உருகுவித்து, உள்ளத்தின் கண்ணே அறிவாகிய ஒளியை வளர்த்து, என்றும் வற்றுதல் இல்லாத பேரின்பமாகிய தேனினைப் பொழிந்து இடந்தோறும் என்னுடன் திரிந்த செல்வப் பொருளே, சிவபெருமானே, யான் உன்னை விடாது இறுகப் பற்றிக் கொண்டேன், ஆதலால் இனி என்னை விட்டு எங்கு எழுந்தருளிச் செல்வது?

திருச்சிற்றம்பலம்

இ. யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மா முண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

யாவர்க்கும் நன்மையாகும் இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு வணங்குதல் வேண்டும். எல்லோருக்கும் பா கொடுக்கும் பசுவிற்கு ஒரு பிடி புல்லையாயினும் கொடுங்கள். சாதிபேதம் பாராது பசி என்று வந்தோர்க்கு நீங்க உண்பதற்கு முன்னர் ஒரு பிடி சோறாவது கொடுங்கள். பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவர்க்கும் நன்மையாகு

திருச்சிற்றம்பலம்

ஈ. கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

சிவன் அடியார்கள் குறைவதும் மிகுவதும் இல்லாத நிலைத்த செல்வத்தை உடையவர்கள். மண் ஓட்டையு பசும் பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர்கள். இறைவனை உள்ளத்தில் கூட்டி வைத்த அன்பு மேலீட்டினா அவனைக் கும்பிடும் பிறப்பு ஒன்றே அல்லாது வீடுபேற்றையும் விரும்பாத வன்மை வாய்ந்தவர்கள்.

உ. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய் வடநூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவில் நின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலா வல்லியே.

**பொழிப்புரை:**

தனது கரத்திலே தாங்கியிருக்கின்ற ஏட்டுத் தொகுதியிலே உள்ள பலதுறைகள் சார்ந்த மொழி அறிவையும், அம்மொழியின் சொல்லாட்சியையும் மெய்ப்படக் கூறும் திறனையும் பெருகும்படியாக எமக்குத் தந்தருள்வாய். வடமொழியும் கடல் போன்ற சீரிய தமிழ்மொழிச் செல்வமுமாக தொண்டனாகிய எனது நாவிலே நின்று காக்கின்றவளே, அருள் புரிவதிலே கடலுக்கு ஒப்பானவருமான சகல கலைகளுக்கும் வல்லவளாக விளங்கும் சரஸ்வதியே.

பாடல் 1 : 5+3 = 8 புள்ளிகள்
பாடல் 2 : 5+3 = 8 புள்ளிகள்
(மொத்தம் 16 புள்ளிகள்)

3. **"இலங்கையில் சைவசமயத்தை மேம்படுத்திய தமிழ்ப் பெரியார்களுள் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்."**

i. **இசைக்கலை வளர்ச்சிக்காக விபுலானந்தர் எழுதிய நூலின் பெயர் என்ன?**
யாழ்நூல்

ii. **விபுலானந்தர் எழுதிய சைவசமயம் சார்ந்த நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.**
கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளை இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டைமணிமாலை, உமாமகேஸ்வரன் கணேச தோத்திரபஞ்சகம், நடராஜவடிவம், குமாரவேல் நவமணிமாலை, நான்மணிமாலை, தோத்திரம்.

**(எவையேனும் மூன்று எழுதியிருப்பின் உரிய புள்ளிகளை வழங்குக)**

iii. **விபுலானந்தரின் சமூகப் பணிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.**

- மக்களை எப்போதும் நேசித்தவர்
- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்
- அனாதை இல்லங்களின் வளர்ச்சிக்காகக் கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங்களை ஏற்படுத்தியவர் (கல்லடி உப்போடை)
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக வித்திட்டவர்
- இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகளின் முகாமையாளராகக் கடமை புரிந்தவர்
- கல்லடி சிவானந்தா ஆண்கள் பாடசாலை, காரைதீவு சாரதா வித்தியாலயம், திருமலை இந்துக் கல்லூரி, வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நிறுவினார்

**(எவையேனும் மூன்று விடயங்களை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும்)**

(1+3+4=8 புள்ளிகள்)

4. " இலங்கையில் சைவசமய பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் சைவசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன."

(i) **சைவவித்தியாவிருத்திச்சங்கம் எந்த ஆண்டில், எவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டது?**

1923 ஆம் ஆண்டு (மார்கழி மாதம் ஒன்பதாம் திகதி) யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி

(ii) **சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் நோக்கங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.**

- இலங்கையில் சைவப் பாடசாலைகளை அமைத்துப் பரிபாலித்தல்.
- தனியாரால் ஆரம்பித்து நடத்துவதற்கு வசதிவாய்ப்பு அருகி, கையளிக்கும் பாடசாலைகளை ஏற்று நடத்துதல்.
- முன்னரே ஆரம்பித்து நடைமுறையில் உள்ள சைவப் பாடசாலைகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்து கொடுத்தல்.
- சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
- சைவப் பண்பாட்டினைப் பேணிப்பாதுகாத்தல்.
- முத்தமிழை வளர்த்தல்.
- அனாதைச் சைவப் பிள்ளைகளைப் பராமரித்தல்.

5- 3புள்ளி
4,3- 2புள்ளி
1,2, 1புள்ளி

(iii) **சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் சமூகப் பணிகள் பற்றி சுருக்கமாக விளக்குக.**

**சைவப் பாடசாலைகளை அமைத்தல்**

- இச்சங்க முகாமைத்துவத்தின்கீழ் 187 பாடசாலைகள் காணப்பட்டது.
- இவற்றுள் மூன்று ஆங்கிலமொழிப் பாடசாலைகளும், நான்கு இரு மொழிப்பாடசாலைகளும் காணப்பட்டன.
- இச்சங்கம் நிறுவிய முதலாவது பாடசாலையாக மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் அமைகிறது.

**சைவாசிரியர் கலாசாலையை நிறுவியமை**

- 1925 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது.
- 1500க்கு மேற்பட்ட சைவாசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறினர்

**காவியப் பாடசாலைகள் அமைத்தமை**

- 1930 ஆம் ஆண்டு சைவாசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களது தராதரத்தை அதிகரிக்கும் நோக்கில் காவியப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.
- இங்கு பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புகள் நடாத்தப்பட்டன.

3 எழுதி விளக்கம் -3
2 எழுதி விளக்கம் 2
1 - - 1

**தொழிற்பாடசாலைகளை அமைத்தமை**

31 தொழிற்பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப்பட்டது. அவற்றுள் 15 தையல் மற்றும் நெசவுப் பாடசாலைகளும் 16 பன்னவேலைப் பாடசாலைகளும் வேலையற்ற பெண் பிள்ளைகளின் நலன் கருதி அமைக்கப்பட்டன.

**சைவச்சிறுவர் இல்லங்கள் அமைத்தல்**

1930 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆதரவற்ற சைவச் சிறுவர்களின் நலன் கருதி ஆண், பெண் பிள்ளைகளுக்காக தனித்தனிச் சிறுவர் இல்லங்கள் அமைக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு முதல் உரும்பிராய் கருணை இல்லத்தையும் நிர்வகிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

**இணுவில் இராசரத்தினம் தொழிற்பயிற்சி மையம்**

- 2011 ஆம் ஆண்டு இணுவிலில் சைவச் சிறுவர்களுக்கான மின்னிணைப்பு, கணினிப் பயிற்சிகளை வழங்குவதற்காக இத் தொழிற்பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டது.

(2+3+3= 8 புள்ளிகள்)

5. **"மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் தனிச் சிறப்புடையவை."**

i. **திருவாசகம், திருக்கோவையார் ஆகிய ஒவ்வொன்றும் எத்தனை பனுவல்களைக் கொண்டுள்ளன?**

திருவாசகம் – 656 பனுவல்கள்.

திருக்கோவையார் 400 பனுவல்கள்.

ii. **நாட்டுப்புறப் பெண்களாற் பாடப்படும் பாடல்கள் அமைந்த திருவாசகப் பதிகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

திருவம்மானை, திருவுந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல்

(ஏதாவது இரண்டு எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்குக.)

iii. **மாணிக்கவாசகரின் சைவசமயப் பணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

**தலயாத்திரை மேற் கொண்டமை.**

- திருவாரூரில் இருந்து தில்லைவரை 39 சிவாலயங்களுக்குத் தலயாத்திரை செய்தமை பற்றிய செய்தி திருவாசகத்தில் காணப்படுகிறது.

**திருவாசகம், திருக்கோவையார் அருளியமை.**

- "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது" என்றும் "அழகிய சிற்றம்பலமுடையான்" என்று எழுதி ஒப்பமிடப்பட்டு நிறைவு பெற்றுள்ளது.

திருவாசகம் - 656 பாடல்கள்

திருக்கோவையார் - 400 பாடல்கள்

**சைவமே மேலானது என நிரூபித்தமை.**

- பௌத்த குருமார்களுடனும் பௌத்த மன்னனுடனும் வாதில் வென்று சைவசமயமே உண்மை என நிரூபித்து அவர்களையும் சைவசமயத்தைத் தழுவச் செய்தமை.
- அற்புதங்கள் மூலம் சைப்பணியாற்றியமை
- ஊமைப் பெண்ணை பேச வைத்தமை.

(2+2+4= 8 புள்ளிகள்)

6. "குன்றெ றிந்தவன் அமரர்பால் பேரருள் கொடுநோக்கி
நன்றி யில்லவன் சிறையிடைப் பலபகல் னணுகுற்றீர்
துன்று பேரிடர் மூழ்கினீர் ஈங்கினித் துயரின்றி
என்றும் வாழ்குதிர் துறக்கமேல் வெறுக்கையில் இருந்தென்றான்." – கந்தபுராணம்

i. **தமிழில் கந்தபுராணத்தை இயற்றியவர் யார்? அது எத்தனை காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது?**

கச்சியப்ப சிவாச்சாரியார்

ஆறு காண்டங்கள்

அவையாவன: உற்பத்திக் காண்டம்
அசுர காண்டம்
மகேந்திர காண்டம்
யுத்தகாண்டம்
தேவகாண்டம்
தட்சகாண்டம்

ii. **முருகனின் பேரருள் பற்றி இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**

கிரவுஞ்ச மலையை அழித்த முருகப்பெருமான் தேவர்கள் மீது இரக்கம் கொண்டு நன்றியில்லாத சூரபத்மனது சிறையிலிருந்து தேவர்களை மீட்டு இனித் துன்பமின்றி சுவர்க்கத்தில் செல்வத்துடன் மகிழ்ச்சியாக வாழும்படி அருளினார் என்ற பேரருள் செய்தி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

iii. **கந்தபுராணத்தின் மீட்சிப் படலத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தியினைச் சுருக்கமாக விளக்குக.**

- கந்தபுராணத்தின் யுத்தகாண்டத்தில் மீட்சிப்படலம் இடம்பெறுகிறது.
- வீரவாகுதேவர் முருகன் கட்டளைப்படி சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறைமீட்ட செய்தி
- சிறைமீண்ட தேவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் முருகப்பெருமான் பாதங்களை வீழ்ந்து வணங்கி போற்றுதல்
- இறந்த பூதகணங்களை உயிர்பெற்றெழச் செய்தல்
- வீரமகேந்திரபுரியையும் அவுணர்களின் ஏழு தீவுகளையும் முருகன் கட்டளைப்படி அழித்த செய்தி.
- முருகன் போர்க்களம் நீங்கி இலங்கையைச் கடந்து செந்திற் பதியை அடைந்த செய்தி.
- செந்திற் பதியில் முருகன் சிவலிங்க பூசை செய்தல், தேவர்கள் முருகனுக்குப் பூசை செய்தல்
- திருச்செந்திற் பதியின் சிறப்பு (திருச்செந்தூர்)
- முருகன் திருவடியில் என்றும் நீங்காத அன்பு பெறவேண்டுமெனத் தேவர்கள் வரம் பெறல்

(2+2+4= 8 புள்ளிகள்)

7. **மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.**

(i) **திருமூலர்**

- சித்தர் பரம்பரையில் முதலாவது சித்தர்
- அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்
- திருக்கைலாய பரம்பரையினர் மாலங்கரின் வேண்டுதலுக்கு ஏற்ப சிதம்பரத்தை அடைந்து யோகம் பயின்றவர்
- மூலத்தை உணர்ந்ததனால் திருமூலரானவர்
- பசுக்களின் துயரம் போக்க மூலரின் உடலில் புகுந்து பசுக்களை உரிய இடம் சேர்ப்பித்தவர்
- மூவாயிரம் ஆண்டுகள் உலகில் வாழ்ந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடியருளியவர். இது திருமந்திரம் என அழைக்கப்படுகின்றது
- திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் சாரமாக ஒன்பது தந்திரங்களாக பாடி அருளியுள்ளார்
- திருமந்திரம் பத்தாம் திருமுறையாக இடம்பெறுகின்றது (4 புள்ளிகள்)

(ii) **சங்கம வழிபாடு**

- சிவனடியார் திருக்கூட்டமே சங்கமம் என அழைக்கப்படும்
- சிவனடியார்கள் சிவபெருமானிடம் மெய்யன்பு கொண்டவர்கள்
- முப்பொழுதும் சிவனை நினைப்பவர்கள் சிவன் பெருமைகளைக் கேட்பதிலும் தொண்டுபுரிவதிலும் திருவைந்தெழுத்தை ஓதுவதிலும் மகிழ்ச்சி அடைபவர்கள்
- சிவனடியார்களைச் சிவமாகக் கருதி வழிபடும் முறை சங்கம வழிபாடு ஆகும்
- சிவனடியார் வழிபாட்டின் மூலம் பின்வரும் பயன்களைப் பெறலாம்
- 1. கீழான எண்ணங்களை விலக்கி, உயர்வான எண்ணங்களைப் ஏற்படுத்தும்
- 2. உலகப் பற்றை நீக்கி தெய்வீகப் பற்றை ஏற்படுத்தும்
- 3. பக்தியையும் வைராக்கியத்தையும் வளர்க்கும்
- திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறநாயனார் முதலான நாயன்மார்கள் சங்கம வழிபாட்டின் மூலம் வீடுபேறு அடைந்துள்ளனர்
- சிவனடியார்கள் சைவ சமயத்தில் நடமாடும் தெய்வங்களாக மதிக்கப்படுகின்றனர்
- சைவ சித்தாந்தத்தில் முக்திக்குரிய வழிகளில் ஒன்றாக சங்கம வழிபாடு கூறப்பட்டுள்ளது

(04 புள்ளிகள்)

(iii) **கண்ணகியம்மன் வழிபாடு**

- நாட்டார் பெண்தெய்வங்களில் கண்ணகியம்மன் வழிபாடும் ஒன்று
- தமிழகத்தில் இருந்து முதலாம் கஜபாகுவினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதுடன் சிறப்புப் பெற்றது
- மட்டக்களப்புத் தமிழகம், பத்தினிக் கதாவ, பத்தினிஹல்ல, ராஜவலிய, ராஜரத்தினாகா, கஜபாகத்தாவ போன்ற தமிழ் சிங்கள மொழி நூல்களில் கண்ணகி வழிபாடு கூறப்படுகிறது.
- இலங்கையின் கண்ணகி வழிபாட்டின் தொன்மைக்குச் சகவீரனின் கண்ணகி வழக்குரை எனும் நூல் சான்று பகர்கிறது.
- கண்ணகி வழிபாடு மட்டக்களப்பில் சிறப்புற்றுக் காணப்படுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் இவ்வழிபாடு சிறப்புப் பெறுகிறது.
- பௌத்த மக்கள் கண்ணகியைப் பத்தினிக் தெய்வமாக வழிபடுகின்றனர்
- வைகாசி மாதத்தில் கண்ணகிவழிபாடு இலங்கையில் சிறப்புற நடைபெறும்

- வழிபாட்டு முறைகளாகக் கண்ணகியம்மன் கதைபடித்தல், பொங்கலிடல், காவடி எடுத்தல், குளிர்த்தி. வேட்டுநாட் சடங்கு, உடுக்குச் சிந்து பாடுதல், கோவலன் கூத்து, கும்மி கோலாட்டம் என்பன காணப்படுகின்றன
- சடங்கு நடத்துபவர் கப்புகனார், பூசாரி, ஐயர், அந்தணர்.
- கண்ணகி வழிபாடு இன்று கண்ணகையம்மன் வழிபாடாக மாற்றம் பெற்று ஆகம முறைக்கேற்ப பூசைகள் நடைபெறுகின்றன. உ-ம்: வற்றாப்பளைக் கண்ணகியம்மன், மட்டுவில் பன்றிதலைச்சியம்மன்.
- கண்ணகியம்மன் வழிபாட்டின் நோக்கமாக நோய் நீக்கம், வேளாண்மை விருத்தி என்பன காணப்படுகின்றன.

(04 புள்ளிகள்)

(iv) **குங்கிலியக்கலய நாயனார்**

- திருக்கடவூரில் அவதரித்த சிவபக்தர்
- சிவனுக்குக் குங்கிலியமிட்டு சரியைத் தொண்டு புரிந்ததினால் குங்கிலியக் கலயரானார்.
- வறுமையிலும், பொருள் பண்டங்களையும், மனைவியின் தாலியையும் விற்றுக் குங்கிலியத் தூபமிட்டுத் தொண்டு செய்தவர்
- சிவனருளால் வீட்டில் நெற்குவியலும் பொற்குவியலும் கிடைக்கப்பெற்றவர்
- சிவலிங்கத்தை நிமிரச் செய்தவர்
- சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோருக்கு திருவமுதிட்டுப் பணிசெய்தவர்.
- திருக்கடவூர்ப் பெருமானுக்கு வாழ்நாள் முழுவதும் தூபதீப தொண்டு செய்து சிவபதமடைந்தவர்

(04 புள்ளிகள்)

குறிப்பு

சிறுகுறிப்பில் ஏதாவது முக்கிய கருத்துகள் நான்கு கூறப்பட்டிருப்பின் 4 புள்ளிகள் வழங்கவும்.